# 3 பௌதிக, மானிட நிலத்தோற்றம் என்பவற்றுக்கிடையான தொடர்பு மனித வாழ்க்கையில் செல்வாக்குச் செலுத்தும் விதம்

தென்னாசிய வலய நாடுகளின் அமைவிடம், காலநிலை, தரைத்தோற்றம், பொருளாதார நடவடிக்கைகள், கலாசாரப் பண்புகள் பற்றிய தகவல்களை இரண்டாம் பாடத்தில் நீங்கள் கற்றுள்ளீர்கள். வலயம் என்ற வகையில் ஒன்றாக இருந்த போதும் நாடுகளுக்கிடையில் பெருமளவு வேறுபாடு காணப்படுவதை தகவல்கள் பலவற்றின் மூலம் விளங்கிக் கொண்டுள்ளீர்கள். இப்பாடத்தில் பல்வேறு சூழல்களுக்குத் தகுந்தவாறு மனித செயற்பாடுகளும் மனித வாழ்க்கையும் உருவாகியுள்ள விதத்தினை பின்வரும் தலைப்புக;டாக அறிந்து கொள்வோம்.

- இந்தியாவின் கிராமியப் பகுதிகளில் சக்தி வளங்கள்.
- இமாலயப் பிரதேச பழங்குடி மக்கள்.
- இந்தியாவில் இரும்புத்தாது அகழ்தல்.
- பங்களாதேஷில் சணல் கைத்தொழில்.
- பாகிஸ்தானில் கிராமியக் கைத்தொழில்கள்.
- மாலைதீவின் சுற்றுலாப்பயணக்கைத்தொழில்.


## இந்தியாவின் கிராமியப் பகுதிகளில் சக்தி வளங்கள்

தென்னாசிய வலயத்திலே பரப்பளவில் கூடிய நாடு இந்தியாவாகும். இது அபிவிருத்திப் பாதையில் மிக வேகமாக வளர்ந்து செல்லும் நாடாக இருந்த போதும் இந்தியாவின் மொத்த சனத்தொகையில் 74% ஆனோர் கிராமங்களில் வாழ்கின்றனர். இவர்களில் பெரும்பாலானோர் மிகவும் வறுமை நிலையில் காணப்படுகின்றனர். இவர்கள் காணி, வீடு, உணவு, தொழில், சக்தி வளங்கள் என்பவற்றைப் பெறுவதில் மிகுந்த சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

இந்தியாவின் கிராமியப்பகுதிகளின் சக்திவள மூலங்களை உரு 3.1 காட்டுகிறது. இயற்கையில் உள்ள அல்லது மனிதனால் தயாரிக்கப்பட்ட எந்தவொரு சக்தி மூலத்தையும் சக்திவளம் என அழைக்கலாம். இந்தியாவின் கிராமங்களில் சக்தி வளங்களை மக்கள் பெறும் விதத்தினை இப்போது நாம் அறிந்து கொள்வோம்.

### செயற்பாடு

கீழே தரப்பட்டுள்ள உருவில் காட்டப்பட்டுள்ள சக்திவள மூலங்களின் பெயர்களைக் குறிப்பிடுக.




**உரு 3.1 சக்தி வளங்கள்**

மனிதர்களின் நாளாந்த நடவடிக்கைகளுக்கு யாதேனும் ஒரு சக்தி மூலமாவது தேவைப்படுகிறது. எனவே மனிதன் தனது வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்த சக்தி வளம் பல்வேறு வழிகளில் துணைபுரிகின்றது எனலாம்.

இந்தியாவில் உற்பத்தியாகும் மொத்த சக்தி வளங்களில் குறைந்த அளவினதே வீட்டுத் தேவைக்காகப் பயன்படுத்தப்படுகிறது. இச்சக்தி வளத்தின் பயனை கிராம மக்களில் குறைந்தளவு எண்ணிக்கையினரே பெற்றுக் கொள்கின்றனர். இந்திய கிராமியப் பகுதிகளில் சக்தி வளம் உற்பத்தியாக்கப்படும் முறை பல்வேறுபட்டனவாக இருப்பதுடன் அவை பிரதேசத்துக்குப் பிரதேசம் வேறுபட்டனவாகவும் உள்ளன அவையாவன.

1. நீர் மின்சக்தி.
2. விவசாய கழிவுப் பொருட்கள்.(வைக்கோல்,காய்கறி உயிரியல் வாயு)
3. காய்ந்த சாணி. (விறாட்டி)
4. காயவைத்த கரும்புச் சக்கை.
5. நெய் முதலானவை.

விவசாய கழிவுப் பொருட்களில் இருந்து சக்தி வளம் உற்பத்தி செய்யப்படுகின்றது.



உரு 3.2
சாணி, வைக்கோல் என்பவற்றை காயவைத்து எரிபொருள் தயாரித்தல்.

இந்தியாவின் பெரும்பாலான பகுதிகளில் மாடுகள் வளர்க்கப்படுவதால் சாணத்தைப்பெற்றுக் கொள்வது இலகுவானதாகும். பசுக்களை இந்திய மக்கள் தெய்வமாக வழிபடுவதால் அதனைக் கொலை செய்தல் தடைசெய்யப்பட்டுள்ளது. மாட்டின் சாணம், வைக்கோல் என்பவற்றை கலந்து சக்தி வளம் உற்பத்தி செய்யப்படுகின்றது. சில பிரதேசங்களில் வரட்சிகாணப்படுவதால் சாணத்தை காயவைத்தல் எளிதாகவுள்ளது. வறுமை காரணமாக வேறு சக்திவளங்களை பயன்படுத்த முடியாமையினால் கிராம மக்கள் சாணம், விறகு போன்றவற்றை எரிபொருட்களாகப் பயன்படுத்துவதில் கூடிய கவனம் செலுத்துகின்றனர்.

சாணம், வைக்கோல் என்பன உலர வைக்கப்பட்டு எரிபொருள் தயாரிக்கப்படும். இவை உணவு சமைத்தல், நீர் கொதிக்க வைத்தல், இறந்தோரின் உடலை (பிணம்) எரித்தல் என்பவற்றுக்குப் பயன்படுத்தப்படுகின்றது. இந்தியக் கிராமங்களில் காய்கறி கழிவுகள், சாணம் என்பவற்றில் உயிரியல் வாயுவை உற்பத்தி செய்தல் சக்தி வள உற்பத்தியில் முக்கியத்துவம் பெறும் பிறிதொரு சக்தி வளமாகும்.



உரு 3.3 உயிரியல் வாயு அலகினைத் தயாரித்தல்

உணவு சமைத்தல், ஒளியை பெறுதல் என்பவற்றுக்கு உயிரியல்வாயு மூலம் சக்தியை பெறக்கூடியதாயுள்ளது.

இந்தியாவில் உற்பத்தி செய்யப்படும் மொத்த மின்சக்தி அளவில் 14 சதவீதம் மட்டுமே வீட்டுத் தேவைக்காகப் பயன்படுத்தப்படுகிறது. மின்சக்தியைப் பயன்படுத்தும் கிராம மக்கள் மிகச் சிறுதொகையினராவர்.

சக்தி வளங்களைப் பெறுவதற்கு பல்வேறு முறைகள் இருந்த போதும் கிராம மக்கள் தமது தேவைக்கேற்ப சக்தி வளங்களைப் பெற முடியாதுள்ளனர். இதனால் பல்வேறு சிரமங்களை அவர்கள் எதிர்நோக்க வேண்டியுள்ளது. அவற்றுள் சில கீழே தரப்பட்டுள்ளன.

- போதுமான அளவு விறகு கிடைக்காததினால் உணவு சமைப்பதற்கும் நீரைக் கொதிக்க வைப்பதற்கும் தடைகள் ஏற்படுதல்.
- காடுகளை அழித்தலை அரசாங்கம் தடை செய்துள்ளதால் விறகினைப் பெறுவதற்கு பெண்கள் நீண்ட தூரம் செல்லவேண்டிய துர்ப்பாக்கிய நிலை.
- கஷ்டப்பிரதேசக் கிராமங்களில் தொழினுட்பங்களைப்பெற முடியாதிருத்தல்.
- உயிரியல்வாயு அலகுகள் மூலம் நீண்ட காலத்திற்கு வெளிச்சத்தைப்பெற முடியாதிருத்தல்.
- இலத்திரனியல் ஊடகங்களைப் பயன்படுத்துவதில் சிரமங்கள் ஏற்படுதல்.

## சக்தி வளத்தினால் மக்கள் பெறும் நன்மைகள்

- சிறிய அளவிலான கைத்தொழில்களை நடாத்த உதவுதல்.
- குழாய் கிணறுகள் மூலம் போதிய சக்தியைப் பயன்படுத்தி இலகுவாக நீரைப் பெறுதல்.
- குழாய்க் கிணறுகள் மூலம் இலகுவாக நீரைப் பெறுவதால் விவசாய நடவடிக்கைகள் வளர்ச்சி அடைதல்.
- மேலதிக உணவுப் பொருட்கள், தானியங்கள் என்பவற்றைக் காயவைத்துப் பாதுகாப்பாக வைத்திருக்கக் கூடியதாக இருத்தல்.
- சாணம், வைக்கோல், கரும்புச் சக்கை என்பவற்றைக் காய வைத்து விற்பனை செய்வதன் மூலம் பணத்தைப் பெற்றுக் கொள்ளுதல்.

சக்தி வளங்களால் உச்சப்பயனைப் பெற்றுக் கொள்வதற்காக இந்தியாவில் கிராமமக்களுக்கு அறிவூட்டுவதற்கான பல்வேறு வழிமுறைகளை அரசாங்கம் மேற்கொண்டு வருகிறது. அவற்றுள் சில கீழே தரப்பட்டுள்ளன.

- சக்திவளங்களைப் பயன்படுத்துதல் மற்றும் பாதுகாப்பு தொடர்பாக அரசாங்கத்தால் சட்டங்கள் இயற்றப்பட்டு உரியவாறு நடைமுறைப் படுத்தப்படுதல்.
- சக்திவளங்களைப் பாதுகாத்துப் பயன்படுத்துதல் தொடர்பாக மக்களுக்கு அறிவூட்டுதல்.
- சக்தி அலகின் மூலம் பெறப்படும் உச்சப்பயன்பாட்டை அதிகரிப்பதற்கு தொழினுட்பங்களைப் பயன்படுத்த உதவுதல்.

## செயற்பாடு

1. இந்தியாவின் கிராமங்களில் பயன்படுத்தப்படும் பல்வேறு சக்திவள மூலங்களில் இலங்கையில் பயன்படுத்தப்படாத சக்தி மூலங்கள் யாவை? அத்தகைய சக்தி மூலங்களைப் பயன்படுத்த இயலுமா என்பது பற்றியும் அவ்வாறு பயன்படுத்தப்படுவதால் பெறக்கூடிய நன்மைகள் பற்றியும் ஆசிரியருடன் கலந்துரையாடுங்கள்.
2. இந்தியாவில் கிராம மக்கள் சக்திவளங்களைப் பெறுவதில் எதிர்நோக்கும் பிரச்சினைகளையும் அதனால் ஏற்படுகின்ற சிரமங்களையும் அட்டவணைப்படுத்திக் காட்டுக.
3. சக்தி வளங்களை சிக்கனமாகப் பயன்படுத்துவதில் மாணவர்களாகிய உங்களால் மேற்கொள்ளக்கூடிய நடவடிக்கைகள் யாவை?
4. I. உங்கள் வீட்டில் பயன்படுத்தப்படும் சக்திவள வகைகள் யாவை?
   II. இவற்றைச் சிக்கனமாகப் பயன்படுத்துவதற்கு உங்களால் மேற்கொள்ளக்கூடிய நடவடிக்கைகள் யாவை?
5. உங்கள் வீட்டில் வெளிச்சம் பெறுவதற்கு பயன்படுத்தப்படும் சக்திவளம் யாது?
6. I. சக்திவளத்தைப் பாதுகாத்து, செலவைக் குறைப்பதற்கு ஒரு மாதத்தில் நீங்கள் மேற்கொள்ளக்கூடிய நடவடிக்கைகள் யாவை?
   II. அந்நடவடிக்கைகளை எடுப்பதால் ஏற்படும் விளைவுகளை எழுதுக. (மின்சாரம், விறகு என்பவற்றுக்கான செலவு)

## இமாலயப் பிரதேசங்களில் வாழும் பழங்குடி மக்கட் குழுக்கள்

புவியோட்டின் மீது காணப்படும் மிக உயர்ந்த மலைத்தொடர் எது என வினவினால் நீங்கள் ''உலகின் மிக உயரமான மலைத்தொடர் இமயமலைத்தொடர்'' என்றே பதில் கூறுவீர்கள்.

இமயமலை 7,200 மீற்றருக்கு மேற்பட்ட உயரத்தையும், 2,400 கிலோ மீற்றர் நீளத்தையும் கொண்டது. இந்த பாரிய உயரம் காரணமாக போக்குவரத்து வசதிகள் இன்மையால் இப்பிரதேசத்தின் மனித நடவடிக்கைகள் அதிகளவில் மட்டுப்படுத்தப் பட்டுள்ளன. இதனால் இப்பௌதிக சூழலுக்கு இசைவாக்கம் பெற்ற 279 இற்கு மேற்பட்ட மக்கட் குழுக்கள் இப்பகுதியில் நீண்டகாலமாக வசித்து வருகின்றனர்

இமய மலைப்பிரதேசத்தின் பௌதிகத் தோற்றப்பாடு காலநிலை என்பவற்றுக்குப் பழக்கப்பட்ட மானிடக்குழுக்களே அப்பகுதியில் வசிக்கும் பழங்குடி மக்கட் குழுக்கள் என அழைக்கப்படுகின்றனர். இப்பகுதிகளில் முக்கிய வாழ்க்கைத் தொழிலாக விவசாயமும் விலங்கு வளர்ப்பும் காணப்படுகின்றன. பள்ளதாக்குக்கு அண்மையிலுள்ள தாழ்நிலங்களிலும் மலைச்சரிவுகளிலும் படிக்கட்டு முறையில் நெற்பயிர்ச் செய்கை இடம்பெறுகிறது.

இமய மலைத் தொடரின் மிக உயரமான சிகரம் எவரெஸ்ட் (8,768 km) ஆகும். இச்சிகரத்தை அடைந்த சேர் எட்மண்ட்ஹிலாறி என்பவருக்கு துணையாக இருந்த


- இலவச பாடநூல் விநியோகத்திற்காக -



**ஷெர்பா பழங்குடியைச்சேர்ந்த டென்சிங்**



**எட்மன்ட் ஹிலாறி**




**உரு 3.4 இமாலய மலைத்தொடர்**

''டென்சிங்'' என்பவர் இமாலய மலைத்தொடரில் வாழும் ஷெர்பா பழங் குடியைச் சேர்ந்தவராவார்.

இமாலயத்தில் வாழும் பல்வேறு பழங்குடிகள்.

- இந்தியாவின் இமசால் பகுதி - காசா குலத்தினர் (Khasa)
- லடாக் பகுதி - தரட் (Darad)
- இமாலயப் பகுதி - புட்டியா (Bhutia)
- சிபீம் பகுதி - லெப்சா (Lepcha)
- சோலோகும்பு பகுதி - ஷெர்பா (Sherpa)

## மலைப்பிரதேச பழங்குடி மக்களின் வாழ்க்கைக்கோலம்

இமயமலைப்பகுதியில் காணப்படும் பௌதிக இயல்புகள், காலநிலை என்பவற்றுக்கேற்ப இசைவாக்கம் பெற்ற விதத்தில் இப்பழங்குடி மக்களின் வாழ்க்கைக் கோலம் அமைந்துள்ளது. அவர்களின் நாளாந்த செயற்பாடுகளை இலகுவாக்கும் விதத்தில் உடலமைப்பும் காணப்படுகிறது.

- மலையேறுவதற்கு இலகுவான விதத்தில் கால்களும், பாதத்தின் அடிப்பாகமும் வலுமிக்கதாக அகன்று காணப்படுதல்.
- உயர் மலைப்பிரதேசங்களில் நிலவும் வளிமண்டல அமுக்கத்துக்குத் தாக்குப் பிடிக்கக் கூடிய விதத்தில் சுவாசப்பை அமைந்திருப்பதனால் குறைந்த ஒட்சிசனை சுவாசித்து வாழக்கூடியதாக இருத்தல்.
- பாரமான பொருட்களைச் சுமந்து செல்வதற்கு ஏற்ற விதத்தில் வலுமிக்கதாக இரு தோள்களும் விருத்தி பெற்றிருத்தல்.
- மூக்குத்துவாரம் அகன்றிருத்தல்.


**உரு 3.5 மலைப்பகுதியில் பயிர்ச்செய்கை நிலம்**


**உரு 3.6 காஷ்மீரில் ஆடு வளர்ப்பு**


**உரு 3.7 கம்பளி ஆடை பின்னும் பெண்மணி**

இமய மலையை அண்டிய பிரதேசங்களில் கால்நடை வளர்ப்பின் கீழ் மாடுகள், ஆடுகள், செம்மறியாடுகள் என்பன வளர்க்கப்படுகின்றன. நாடோடி மந்தை வளர்ப்பு இங்கு முக்கியமானதாகும். பாலைப்பெறுதவற்கு ''யாக்'' எனப்படும் மாடு சிறப்பாக வளர்க்கப்படுகிறது.

நேபாளத்தின் மலைப்பகுதியிலுள்ள ஷெர்பா குழுப் பெண்கள் துணிநெய்தல், கம்பளி ஆடை தைத்தல் என்பவற்றால் வருமானம் பெறுகின்றனர். இக்கம்பளி ஆடைகள் குளிரிலிருந்து பாதுகாத்துக் கொள்வதற்கு மலையேறுபவர்களால் பயன்படுத்தப்படுகின்றது. இதிலிருந்து இப்பகுதியின் பௌதிக நிலைமைகளுக்கு ஏற்ப அவர்களின் வாழ்க்கைக் கோலங்கள் அமைந்துள்ளன என்பது தெளிவாகப் புலனாகின்றது.



**உரு 3.8 பொருட்களைத் தூக்கிக் கொண்டு மலையேறும் கூட்டத்தினர்**

இமயத்தில் வாழும் பழங்குடி மக்கள் சுற்றுலாப் பயணிகளின் பொருட்களைத் தூக்குதல், அவர்களுக்கு வழிகாட்டுதல், பொருட்களை விற்பனை செய்தல் என்பவற்றைச் செய்வதன் மூலம் சுற்றுலாக் கைத்தொழில்சார் தொழில்களில் ஈடுபட்டுள்ளனர்.

மலைப்பகுதி பழங்குடியினரின் வீடுகளும் பௌதிகச் சூழலுக்கேற்றவாறும், அவர்களின் வாழ்க்கைப் பாங்குக்கு இணங்கவும் வேறுபடும். கற்கள், களிமண், மரங்கள், மரத்தூள் போன்ற சூழலில் காணப்படும் இயற்கைப் பொருட்களைப் பயன்படுத்தி வீடுகள் கட்டப்படுவதுடன் கூரைக்காகக் காய்ந்த புல்வகைகள் பயன்படுத்தப்பட்டிருப்பதையும் காணலாம்.



**உரு 3.9 விவசாயப் பண்ணை அருகில் வீட்டுத் தொகுதி**



**உரு 3.10 மலைவாழ் பழங்குடி குழுவினரின் வீடுகள்**

நேபாளத்தில் வசிக்கும் பழங்குடி மக்கள் விவசாய நிலங்களுக்கு அருகில் கூட்டமாக வீடுகளை கட்டி வாழ்வதையே பெரிதும் விரும்புகின்றனர். பெரும்பாலும் இம்மலைவாழ் பழங்குடியினருக்கு நிரந்தர வீடுகள் பெருமளவில் இருப்பதில்லை. முக்கியமாக இடம்பெயரும் கால்நடை வளர்ப்பை மேற்கொள்ளும் ஷெர்பா மரபினர் மலைப்பகுதியில் உயர் பகுதி, மத்திய பகுதி, தாழ்நிலப்பகுதிகளில் நிர்மாணித்துள்ள தற்காலிக வீடுகளை காலத்திற்கேற்றவாறு பயன்படுத்துவர்.


- இலவச பாடநூல் விநியோகத்திற்காக -

மலைவாழ் மக்கள் விவசாய நடவடிக்கைகளில் ஈடுபடும் போது நெல், சோளம், கோதுமை, பயறு, எள்ளு போன்ற தானியங்கள், காய்கறி, உருளைக்கிழங்கு போன்ற கிழங்கு வகைகள் என்பவற்றைப் பயிரிடுவர். ஒரு பகுதியை நுகர்வுக்காக வைத்திருப்பதோடு மீதியை விற்பனை செய்து பணத்தைப் பெறுவர்.

காடுகளில் வளரும் பல்வேறு வகைப்பட்ட கிழங்குகள், தேன், விலங்கு வேட்டையாடல் மூலம் பெற்ற இறைச்சி வகைகள் என்பவற்றை உணவாகக் கொள்வர். ஆடைகள் குளிரைத் தாக்குப் பிடிக்கக் கூடிய துணிகளால் ஆக்கப்பட்டிருக்கும். கைகளையும், உடம்பையும் தலையையும் மூடும் விதத்தில் தைக்கப்பட்ட ஆடைகளையும் சப்பாத்துக்களையும் சாதாரணமாக அணிந்திருப்பார்.

## மலைவாழ் பழங்குடிமக்கள் வாழ்க்கையோடு தொடர்புடைய பிரச்சினைகள்

- பல்வேறு பகுதியிலிருந்தும் மக்கள் கூட்டத்தினர் வருவதால் அவர்கள் பயன்படுத்தும் காணி வரையறைக்குட்படுதல். காணியின் உரிமை பற்றிய பிரச்சினைகள்.
- பிள்ளைகள் பாடசாலைக்கல்வியைப் பெறுதல் குறைவடைதல், இதற்கான காரணம் பல கிராமங்களுக்கு ஒரு பாடசாலை மட்டுமே காணப்படுதல். அத்துடன் கஷ்டங்கள் நிறைந்த பாதையினூடாக நீண்ட தூரம் பயணம் செய்தே பாடசாலையை அடையக்கூடியதாயிருத்தல்.
- மிருகங்கள் களவாடப்படுதல், மற்றும் மிருகங்களுக்கு உணவைத் தேடிப்பெறுவதில் ஏற்படும் பிரச்சினைகள்.
- அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்படும் பல்வேறு அபிவிருத்தி நடவடிக்கைகளால் அவர்கள் பழக்கப்பட்ட வாழ்க்கை முறைக்குப் பாதிப்பு ஏற்படுதல். புதிய வாழ்க்கைக் கோலத்துக்கு மாறுவதற்கு ஏற்படும் அச்சம்.
- இமய மலையை அண்மித்த பகுதிகளில் ஏற்படும் சுற்றுலாத்துறை விருத்தி, மலையேறுவதற்கு வரும் கூட்டம் அதிகரித்தல் என்பவற்றினால் சூழல் மாசடைதல், பயிர்செய்கை நடவடிக்கைகள் காரணமாக நீரூற்றுகள் அழிவடைதல், குடிப்பதற்கான நீருக்குத் தட்டுப்பாடு, காடுகள் அழிவடைதல் போன்றனவும் இங்கு காணக்கூடிய ஏனைய பிரச்சினைகளாகும்.



### மாணவர் ஆய்வு

இலங்கையின் மத்திய மலைநாட்டின் தரைத்தோற்றம், காலநிலை என்பவற்றுக்கு அமைய மனித நடவடிக்கைகள் காணப்படும் விதத்தினை அறிந்து எழுதுக.

## செயற்பாடு

1. பொருத்தமான சொற்களை வைத்துப் பின்வரும் பந்தியைப் பூரணப்படுத்துக.
இமாலயப் பிரதேசங்களில் பல்வேறு (1)............................................ மக்கள் கூட்டத்தினர் வாழ்கின்றனர். (2)............................................ மலைச்சிகரத்தை அடைந்த (3)........................................................ உதவி புரிந்த (4)............................................................. என்பவருக்குரிய பழங்குடி (5)............................................ ஆகும். இந்தியாவின் இமசால் பகுதியில் (6)................................................ பழங்குடி மக்கள் வாழ்கின்றனர். (7)........................................................ கூட்டத்தினர் பெருமளவில் நாடோடி இடையர் வாழ்க்கையை மேற்கொள்கின்றனர்.

2. தற்போது பழங்குடி குழுவினர் எதிர்நோக்கும் பிரச்சினைகள் இரண்டினை எழுதுக.

3. இமாலய மலைவாழ் பழங்குடி மக்கள் சூழலுக்கமைய வாழும் விதத்தினை விளக்குக.


4. மலைவாழ் பழங்குடி மக்கள் அந்தந்தப் பகுதிகளின் அபிவிருத்திக்கு வழங்கும் சேவைகள் யாவை என்பதை மதிப்பிட்டு 5 வாக்கியங்கள் எழுதுக.

5. தென்னாசிய வலயத்தில் வாழுகின்ற பழங்குடி குழுக்களின் வாழ்க்கை முறை பற்றிய குறிப்பேடு ஒன்றினைத் தயாரிக்க.

## இந்தியாவில் இரும்புத்தாது அகழ்தல்

உலகில் இரும்புத்தாது காணப்படும் நாடுகளிடையே முதல் இடத்தை ரஷ்யாவும் இரண்டாம் இடத்தை இந்தியாவும் பெறுகின்றன.

இந்தியா கனிய வளங்களின் செல்வம் மிகுந்த நாடு. இந்தியாவில் இரும்புத்தாது காணப்படும் பகுதிகளாக மேற்கு வங்காளம், பீகார், ஓரிசா, மத்திய பிரதேசம், கர்நாடகம், கோவா, மைசூர் ஆகியவற்றைக் குறிப்பிடலாம். மேலே தரப்பட்டுள்ள 3.1 தேசப்படத்தில் இந்த இடங்களை அவதானிக்குக. இந்தியாவில் இரும்பு பெருமளவில் காணப்படுவதாலும் இரும்பை உருக்குவதற்குத் தேவையான வலுப் பொருளான நிலக்கரி, பெருமளவில் காணப் படுவதாலும் இரும்பு உருக்கு கைத்தொழில் மிகவும் வளர்ச்சி பெற்றதாகக் காணப்படுகிறது.




**தேசப்படம் 3.1 இந்தியாவின் இரும்புத்தாது பரம்பல்**

## இரும்புத்தாது அகழ்ந்தெடுக்கும் கைத்தொழில் மக்கள் வாழ்க்கையில் செல்வாக்கு செலுத்தும் விதம்

- இரும்புத்தாது ஒரு பௌதிக வளமாகும். இரும்புத் தாது அகழ்ந்தெடுக்கும் பிரதேசங்களில் இரும்புத்தாது அகழ்வுத்தொழில் மக்களின் வாழ்க்கையில் பல்வேறு விதங்களில் செல்வாக்குச் செலுத்துகின்றது.
- இரும்புத்தாது அகழ்ந்தெடுக்கும் கைத்தொழில் பரவியுள்ள பிரதேசங்களில் மக்களின் வாழ்க்கைத்தரம் உயர்ந்ததாக விளங்குகின்றது. இதற்கு உதாரணமாக யாம்செட்பூர், ரணிகஞ்ச், மயூர்பான்ச், பத்ராவதி, கோவா ஆகிய கைத்தொழில் பிரதேசங்களைக் குறிப்பிடலாம்.
- இப்பிரதேசங்கள் கைத்தொழில் பிரதேசங்களாக பிரகடனப்படுத்தப்படுவதால் பல்வேறு வகையான தொழில் வாய்ப்புக்கள் பெருமளவு காணப்படுகின்றன. சிறிய உடலுழைப்புத் தொழிலாளரிலிருந்து பொறியியலாளர் மற்றும் நிறைவேற்று அதிகாரிகள் தரம் வரையும் பல்வேறு தொழில்கள் இப்பிரதேசங்களில் காணப்படுதல்.
- புதிய குடியிருப்புகள் உருவாவதுடன் பெருமளவில் நகரமயமாதல், இரும்பு அகழ்தல் கைத்தொழில் இடம்பெறும் பகுதிகளுக்கு தொழில்களை நாடி மக்கள் வருவதால் வீட்டுத் தொகுதிகள் கட்டப்படுதல், இதனால் பெருந்தெருக்கள் விருத்தியடைதல், தொடர்பாடல், மின்சாரம், வைத்திய சாலைகள், கல்வி நிறுவனங்கள் போன்ற உட்கட்டமைப்பு சேவை வசதிகள் பெருமளவில் விரிவடைதல்.

- தொழிலாளர்களுக்குப் பயிற்சி அளித்தல், மற்றும் நலன்புரிச் சேவை நடவடிக்கைகள் என்பன பெரிதும் விருத்தியடைதல்.
- இரும்புத்தாதை அகழ்ந்தெடுக்கும் போது வெளியேற்றப்படும் பொருட்கள் (மண், கல்) அப்பகுதியில் கொட்டப்படும் போது, விவசாய நிலங்கள் அழிந்து போகின்றன. விவசாயிகள் நிலங்களை இழப்பதாலும், விவசாய நடவடிக்கைகளில் ஈடுபட முடியாதிருப்பதாலும், வேலைவாய்ப்பின்மையாலும் இம்மக்களின் வாழ்க்கைத்தரம் நலிவடைவதிலும் இது செல்வாக்குச் செலுத்துகிறது.

### இரும்பு அகழ்தல் கைத்தொழிலினால் மக்கள் வாழ்க்கையில் ஏற்படும் பாதகமான விளைவுகள்

- சூழல் மாசடைதல் முக்கியமானதாகும்.
- இரும்பு அகழ்ந்தெடுக்கப்படுவதால் பாரிய குழிகள் ஏற்படுதல்
- காலநிலைத் தன்மைகள் மாற்றமடைதல்.
- தாவரங்கள், விலங்குகள் என்பன மாற்றமடைதல்.
- காணிப்பற்றாக்குறை காரணமாக காணி இல்லாதோர் உருவாதல்.
- சுவாச நோய்கள், தோல் வியாதி என்பவற்றால் தொழிலாளர் பாதிப்படைதல்.
- இப்பிரச்சினைகளை விட விவசாய நிலங்கள் குறைவடைதல், நகர மயமாக்கலில் வளர்ச்சி ஏற்படுதல் என்பவற்றால் கலாசாரப் பிரச்சினைகளும் எழுந்துள்ளன.

### செயற்பாடு

1. இந்தியாவில் இரும்புத்தாது காணப்படும் இடங்களை தேசப்படப் புத்தகத்தின் துணைகொண்டு இந்திய உபகண்டப்படத்தில் குறித்துப் பெயரிடுக.
2. இந்தியாவின் இரும்பு அகழ்தல் கைத்தொழில் அவ்வப் பிரதேச மக்களின் வாழ்க்கையில் செல்வாக்குச் செலுத்தும் விதத்தினை இரண்டு காரணங்கள் காட்டி விளக்குக.

### பங்களாதேஷின் சணல் கைத்தொழில்

இயற்கையாகப் பெறக்கூடிய நார்களில் சணல் நார் முக்கியமானதாகும். பங்களாதேஷ் மக்கள் வாழ்க்கையில் சணல் கைத்தொழில் பெரும் செல்வாக்குச் செலுத்துகிறது. பங்களாதேஷின் முக்கியவருமானம் பெறும் வழியாகச் சணல் கைத்தொழில் விளங்குகின்றது. இதனால் பங்களாதேஷில் ‘‘**தங்கநார்**’’ எனச்சணல் அழைக்கப்படுகிறது. சணல் நார் பல்வேறு பண்புகளைக் கொண்டது.

* வலிமை
* நீடித்துழைத்தல்
* வெப்பத்தைத் தாக்குப் பிடித்தல்.
* மென்மையும் சிறிதளவில் பளபளப்பும் கொண்டிருத்தல்.

சணல் நார் பெறுவதற்கான செடி சிறிய இலைகளைக் கொண்ட தாவர வகையாகும். இத்தாவரம் நீர்நிலைகளுக்கு அருகில் சேற்று நிலங்களில் பயிரிடப்படக்கூடியது. பெருமளவில் போதுமான நீர் வசதியும், வெப்பமும் காணப்படுதல் சணல் செடி நன்கு வளர்வதற்குச் சாதகமான காரணங்களாகும்.





**உரு 3.11 சணல் தாவரம்**

### பங்களாதேஷில் சணல் பயிர் செய்யப்படும் பிரதேசங்கள்


* கங்கை நதியின் தாழ்நிலப் பள்ளத்தாக்கு.
* பிரமபுத்திர நதியின் தாழ்நிலப் பகுதியான சுந்தர்பான்ஸ் சேற்று நிலம்.

### செயற்பாடு

தேசப்படப்புத்தகத்தைக் கொண்டு இந்திய உபகண்ட தேசப்படத்தில் பங்களாதேஷில் சணல் பயிர் செய்யப்படும் பிரதேசங்களைக் குறித்துப் பெயரிடுக.

### சணல் உற்பத்திகள்

சூழலுக்கு உகந்த பொருளான சணல், ஆடைஉற்பத்திக்கும் வேறு பாரம்பரியமற்ற உற்பத்திகள் பலவற்றுக்கும், மூலப்பொருளாகப் பயன்படுத்தப்படுகிறது.







உரு 3.12 சணல் உற்பத்திப் பொருள்கள்

## செயற்பாடு

1. சணல் உற்பத்திகளைக் காட்டும் சுவரொட்டி ஒன்றினை வரைக.

### சணல் கைத்தொழிலின் புதிய போக்கு

- சூழலுக்கு உகந்த (நேசமான) பொருளானதினால் உலகின் பல நாடுகளிலும் பெருமளவு கேள்வி சணல் பொருட்களுக்கு காணப்படுதல்.
- மோட்டார் வாகனங்களின் உட்பகுதியை அழகுபடுத்துவதற்கு பெருமளவில் பயன்படுத்தப்படுதல்.
- உலகின் பல நாடுகளிலும் பொதி செய்வதற்குப் பொலித்தீனைப் பயன்படுத்துதல் தடை செய்யப்படுவதால் பொதி செய்வதற்கான பொருளாக சணல் உற்பத்திகள் மீண்டும் முக்கியத்துவம் பெறுதல்.


- இலவச பாடநூல் விநியோகத்திற்காக -

❋ சணலுடன் தொடர்புடைய பல்வேறு மாதிரி அலங்காரப் பொருள்கள், பைகள் போன்றன உற்பத்தி செய்யப்படுதல்.

❋ பங்களாதேஷில் கிராமியக் கைத்தொழிலுக்கான மூலப்பொருளாகப் பயன்படுத்தப்படுதல்.

சணல் கைத்தொழில் மக்கள் வாழ்க்கையில் ஏற்படுத்தியுள்ள செல்வாக்குகள் சிலவற்றை பின்வரும் அட்டவணையில் காணலாம்.

| சாதகமானவை | பாதகமானவை |
|---|---|
| ❋ சணல் பயிர்ச் செய்கை நிலங்கள், கைத்தொழிற்சாலைகள் என்பவற்றை அண்மித்த பகுதிகளில் வேலை வாய்ப்புக்கள் பெருமளவு காணப்படுதல்.<br><br>❋ வீதிகள், உட்கட்டமைப்பு வசதிகள் என்பன விருத்தியாதல்.<br><br>❋ நலன்புரி சேவைகள், மருத்துவ சேவைகள் அதிக விருத்தியடைதல்.<br><br>❋ வேறு பயிர்கள் பயிரிட முடியாத நிலங்களில் சணல் பயிரிடப் படுதல்.<br><br>❋ சணல் பயிர்ச் செய்கையினால் மக்கள் வருமானம் அதிகரித்தல்<br><br>❋ வங்காள தேசத்தில் சணல் பயிர்ச் செய்கைக்கு உகந்ததாக நிலங்கள் காணப்படுதல். | ❋ சணல் பயிரிடப்படும் நிலங்கள், நார் உற்பத்திக் கைத்தொழிற் சாலைகள் என்பவற்றில் உழைப்பாளிகள் பார வேலைகளை செய்ய நேரிடுதல்.<br><br>❋ குறைந்த சம்பளம் பெறுதல்.<br><br>❋ பெண்கள், சிறுவர் ஆகியோர் உழைப்பு பெருமளவில் பயன் படுத்தப்படுதல். (சணல் இலைகளை பதப் படுத்துதல், அரைத்தல் களை-கள் அகற்றுதல்.)<br><br>❋ வருமானம்பெற வழிகளிருப்பதால் பிள்ளைகள் கல்வியில் ஈடுபடாமை.<br><br>❋ சணல்நார் உற்பத்தியாக்கப்படும் நிலங்களின் அண்மையில் நுளம்பு களால் பரவும் நோய்கள் ஏற்படுதல். |

## செயற்பாடு

1. பங்களாதேஷில் சணல் கைத்தொழில் மக்கள் வாழ்க்கையில் ஏற்படுத்தியுள்ள பாதகமான விளைவுகளை எடுத்துக் காட்டி இவற்றுக்குத் தீர்வாக எடுக்கக் கூடிய ஆலோசனைகளை முன்வைக்க.
2. சூழலுக்கு உகந்த பொருளான நார் உற்பத்திப் பொருள்களால் ஏற்படக் கூடிய நன்மைகளை எழுதுக.
3. உங்கள் வீட்டில் பயன்படுத்தப்படும் சுதேச தாவர நார்களையும் அந்நார் வகைகளால் உற்பத்தியாக்கப்படும் பொருள்களையும் எழுதுக.
4. இவற்றுக்குப் பிரதியீடாக சந்தையில் காணப்படும் செயற்கை உற்பத்திகளிலும், இயற்கை உற்பத்திகளிலும் உள்ள பண்புகளை ஒப்பிடுக.

## பாகிஸ்தானில் கிராமியக் கைத்தொழில்

பாகிஸ்தான் இந்தியாவின் வடமேற்குப் பாகத்தில் அமைந்துள்ள நாடாகும். தென்னாசியாவிலுள்ள ஏனைய நாடுகளுடன் ஒப்பிடும் போது இயற்கை வளங்களில் குறைந்த நாடாகப் பாகிஸ்தானைக் குறிப்பிடலாம். இதனால் பேரளவுக் கைத்தொழில்களை ஆரம்பிப்பதற்கு நாட்டில் மூலப்பொருள் பற்றாக்குறை என்பது பிரச்சினையாக உள்ளது. நாட்டின் பௌதிக நிலைகளுக்கேற்ப பெறக்கூடிய வரையறைக்குட்பட்ட மூலப் பொருள்களைப் பயன்படுத்திக் கிராமிய மட்டத்தில் பல்வேறு கைத்தொழில்கள் இடம்பெற்று வருகின்றன. பல்வேறு கிராமியக் கைத்தொழில்களின் பரம்பல் பாகிஸ்தான் மக்களின் வாழ்க்கையில் பெருமளவு செல்வாக்குச் செலுத்துகின்றது கிராம மக்களின் தொழில் பற்றாக் குறையைத் தீர்ப்பதற்கு இவை ஒரு வகையில் துணை புரிகின்றன.




**தேசப்படம் 3.2 பாகிஸ்தானில் கிராமியக் கைத்தொழில்கள் பெருமளவில் காணப்படும் பிரதேசங்கள்**

பாகிஸ்தானில் கிராமியக் கைத்தொழில்கள் பெருமளவில் பரவிக் காணப்படும் பிரதேசங்களாக லாகூர், முல்தான், சியல்கொட், குஜ்ரான்வால், சிந்தி, கராச்சி என்னும் இடங்களைக் குறிப்பிலாம்.

### பாகிஸ்தானில் கிராமியக் கைத்தொழில்

- கைத்தறி நெசவுத் துணி
- துணிகளுக்கு சாயமூட்டுதல்
- காலணிகள்
- பானை சட்டி வனைதல்
- பித்தளைப் பொருட்கள்
- இசைக்கருவிகள்
- விளையாட்டு உபகரணங்கள்
- பிரம்பு பொருள்கள்
- கம்பளங்கள்




**உரு 3.13 பாகிஸ்தானின் கிராமியக் கைத்தொழில்கள்**


- இலவச பாடநூல் விநியோகத்திற்காக -

பேரளவு கைத்தொழில்களை ஆரம்பிப்பதற்குத் தேவையான மூலப் பொருட்களின் பற்றாக்குறையினால், கிராம மக்கள் தொழில் வாய்ப்பை பெறுவதற்காக கிடைக்கும் வளங்களைப் பயன்படுத்தி கிராம கைத்தொழில்கள் உருவாக்கப்பட்டுள்ளன. இவ்வாறு உற்பத்தி செய்யப்படும் பொருள்களுக்கு உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் சந்தைகள் உண்டு. கிராமக் கைத்தொழில்கள் மூலம் உற்பத்தி செய்யப்படும் குறிப்பிட்ட பொருள்கள் சில பிரதேசங்களில் பிரசித்தி பெற்றனவாக உள்ளன.

உ+ம்: சிந்துப் பிரதேசம் - கம்பளி
சியல்கொட் - விளையாட்டு உபகரணங்கள்

## செயற்பாடு

1. பாகிஸ்தானில் கிராமியக் கைத்தொழில் பெருமளவு இடம்பெறும் மூன்று பிரதேசங்களை இந்திய உபகண்ட தேசப்படத்தில் குறித்துப்பெயரிடுக.
2. பாகிஸ்தானில் கிராமியக் கைத்தொழில் தொடர்பாகச் சிறப்பாகக் கவனம் செலுத்தப்படுவதற்கான காரணங்கள் இரண்டு தருக.

## பாகிஸ்தானில் கிராமியக் கைத்தொழில்களின் புதிய போக்கு

- வெளிநாட்டு உண்ணாட்டு சந்தைகளில் கேள்வி அதிகரித்தல்
- கிராமியக் கைத்தொழில்களில் புதிய தொழினுட்பங்களைப் பயன்படுத்தும் முயற்சி மேற்கொள்ளப்படல்.
- விவசாயத் தொழிலில் ஈடுபட்டவர்களும் கிராமியக் கைத்தொழில்களில் ஈடுபடுவதில் விருப்புக் கொள்ளுதல்.

## கிராமியக் கைத்தொழில்கள் மக்கள் வாழ்க்கையில் ஏற்படுத்தும் சாதகமான விளைவுகள்

- கிராம மக்களுக்கு தொழில் கிடைப்பதால் வாழ்க்கைத்தரம் மேம்பாடடைதல்.
- போக்குவரத்து மின்சாரம் போன்ற வசதிகளைக் கிராம மட்டத்தில் பெற்றுக் கொள்ளக்கூடியதாக இருப்பதால் பொருளை இலகுவாக உற்பத்தி செய்யவும் விற்பனை செய்யவும் வசதிகள் காணப்படுதல்
- கிராமியக் கைத்தொழில்கள் ஊக்குவிப்பைப் பெறுதல்.
- சிறப்புப் பொருள்களுக்கு வெளிநாட்டிலும் கேள்வி இருப்பதால் (விளையாட்டு உபகரணங்கள், இசைக்கருவிகள்) அதிக வருமானத்தைப் பெறல்.

## கிராமியக் கைத்தொழில் தொடர்பான பிரச்சினைகள்

- மூலப்பொருள் பற்றாக்குறை (மரப்பலகை, பிரம்பு)
- பெண்கள், சிறுவர் ஆகியோரின் உழைப்புக்கு குறைந்த ஊதியம் வழங்குதல்
- பொருள்களை விற்பனை செய்வதில் காணப்படும் சிரமங்கள்

- இலவச பாடநூல் விநியோகத்திற்காக -

## செயற்பாடு


1. பாகிஸ்தான் இயற்கை வளம் குறைந்த நாடாயினும் அங்கு கிராமியக் கைத்தொழில்கள் நன்கு விருத்தியடைந்துள்ளன. அது நாட்டின் அபிவிருத்தியில் செல்வாக்கு செலுத்தும் விதத்தினை விளக்குக.
2. பாகிஸ்தானுடன் ஒப்பிடும்போது இலங்கையில் கிராமியக் கைத்தொழில் பின்னடைவாக இருப்பதற்கான காரணங்களைக் கூறுக.

## மாணவர் ஆய்வு

இலங்கையின் பல்வேறு பிரதேசங்களில் விருத்தியடைந்துள்ள கிராமியக் கைத்தொழில்களைத் தேடியறிந்து அறிக்கை ஒன்றினைத் தயாரிக்குக.

## மாலை தீவுகளின் சுற்றுலாப் பயணக் கைத்தொழில்

மாலைதீவு அரசாங்கத்துக்கு 1190 தீவுகள் உரித்துடையன. இவை பவளப் பாறைகளினால் உருவாக்கப்பட்டவையாகும். இவற்றில் 200 தீவுகளில் மட்டுமே மக்கள் வாழ்கின்றனர். மாலைதீவானது சமுத்திர மட்டத்திலிருந்து 8 மீற்றருக்கு குறைவான உயரத்திலே அமைந்துள்ளது. மாலைதீவு வாசிகளின் முக்கிய பாரம்பரிய வாழ்வாதாரத் தொழில் மீன்பிடித்தலாகும். மாலைதீவில் அந்நியச் செலாவணியைப் பெற்றுத் தரும் வழியாகச் சுற்றுலாப் பயணக் கைத்தொழில் விளங்குகின்றது.




**தேசப்படம் 3.3 மாலைதீவுகள்**

## சுற்றுலாக்கைத்தொழில் விருத்திக்கான காரணங்கள்

- பவளப்பாறைகள் கொண்ட ஆழமற்ற கடல்.
- தெளிவான நீர்.
- மணல் நிறைந்த கண்கவர் கடற்கரையோரங்கள்.
- பாதுகாப்பான களப்புகள், தனித்த தீவுகள் என்பன கொண்ட இயற்கையான சூழல்.



உரு 3.14 சுற்றுலாப் பயணிகளின் மனதைக் கவரும் இடங்கள்

மாலைதீவில் ஆரம்ப காலங்களில் மீன்பிடிக் கைத்தொழில் (கருவாடு, மாசி உற்பத்தி) முக்கியம் பெற்ற போதும் அண்மைக் காலங்களில் சுற்றுலாக் கைத்தொழிலே முக்கிய இடத்தைப் பெற்றுள்ளது.

1992 ஆம் ஆண்டுவரை மீன்பிடிக்கைத்தொழில் மூலம் பெற்ற அந்நிய செலவாணியின் அளவு அதிகரிப்பதற்குச் சுற்றுலாக் கைத்தொழில் பெரிதும் துணை புரிந்துள்ளது. தற்போது மாலைதீவுகளிலே சுற்றுலா விடுமுறைக்கால விடுதிகள் 70 இற்கு மேல் நிருமாணிக்கப்பட்டுள்ளன. மாலே நகரத்தில் அமைந்துள்ள விமான நிலையத்திற்கு அருகில் இச்சுற்றுலா விடுதிகள் அதிக அளவில் அமைக்கப்பட்டுள்ளன. தற்போது மாலைதீவின் மொத்த தேசிய உற்பத்தியில் 17% சதவீதமானது சுற்றுலாக் கைத்தொழில் மூலம் பெறப்படுகிறது.

## பெருமளவில் சுற்றுலாப் பயணிகளாக வருகை தருவோரின் நாடுகள்

- ஜேர்மனி
- பிரித்தானியா
- இத்தாலி
- ஜப்பான்

மாலைதீவுகளின் சுற்றுலாக் கைத்தொழில் சூழல் காரணிகளால் உருவாக்கப்பட்டவையாக விளங்குவது சிறப்பம்சமாகும். சுற்றுலாக் கைத்தொழிலை விருத்தி செய்வதற்காக அரசாங்கத்தினாலும் தனியார் துறையினாலும், போக்குவரத்து வசதிகள், தொடர்பாடல் வசதிகள், குடிப்பதற்கான நீர் வழங்குதல், உட்கட்டமைப்பு வசதிகள் என்பன வழங்கப்பட்டுள்ளன. இத்துடன் சுற்றுலாப் பயணிகளைக் கவரும் இடங்கள், நிகழ்வுகள் என்பனவற்றையும் ஏற்படுத்தியுள்ளனர்.

உ-ம்: மணல், தெளிவான நீர் என்பன காணப்படும் சமுத்திரம் மற்றும் கரையோரங்களில் சூரியகுளியல், நீந்துதல், நீரின் மீது சறுக்குதல், படகுச்சவாரி, பாய்க்கப்பல் முதலிய வசதிகள் வழங்குதல் சுற்றுலாப் பயணிகளின் இரசனைக்கேற்ப விடுமுறைக்கால விடுதிகள் நிர்மாணித்தல் (தனிமையில் இருக்க விரும்புவோர்) படகு விமானம் மூலம் போக்குவரத்து நடவடிக்கை என்பவற்றை வழங்குதல்.

மாலைதீவுகளில் வாழும் மக்களின் தனித்துவம், கலாசாரம் என்பவற்றுக்கு பாதிப்பேற்படாத விதத்தில் சுற்றுலாத் துறையை ஒழுங்குபடுத்துதல். உ-ம்: மாலைதீவு மக்கள் பெருமளவில் வாழும் மாலே தீவில் சுற்றுலாப்பயணிகளுக்குத் தடை விதிக்கப்பட்டிருத்தல், மாலே தீவில் அதிகரிக்கும் சனத்தொகைக்குத் தேவையான காணி வசதிகளை ஏற்படுத்தும் நோக்கில் தீவுகள் சிலவற்றில் சுற்றுலாப் பயணிகள் செல்வதற்குத் தடை விதிக்கப்பட்டிருத்தல். (1990 இல் விலன்கிலி தீவு)

வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளுக்காக ஒதுக்கப்பட்டுள்ள தீவுகளில் மட்டும் வசதிகள் நிறைந்த சுற்றுலா விடுதிகள், விடுமுறை விடுதிகள், ஹோட்டல்கள் என்பன அமைக்கப்பட்டுள்ளன.



**உரு 3.15 சுற்றுலாப் பயணிகளின் மனங்கவர் நிகழ்வுகள் சில**


- இலவச பாடநூல் விநியோகத்திற்காக -

## மாலைதீவுகளின் சுற்றுலாக் கைத்தொழில் மக்கள் வாழ்க்கையில் ஏற்படுத்தும் செல்வாக்கு

- சுற்றுலாத் துறை தொடர்பில் பல்வேறு தொழில் வாய்ப்புக்கள் உருவாகுதல். (ஹோட்டல், வழிகாட்டல், வாகன சாரதிகள், தொடர்பாடல் வசதி வழங்குவோர்.)
- சுயதொழில் விருத்தியடைவதற்கும் உற்பத்திப் பொருட்களை விற்பனை செய்வதற்கும் வசதிகள் கிட்டுதல் (வியாபாரம், பொருள் உற்பத்தி.)
- திட்டமிட்ட விதத்தில் நடைபெறுவதால் தேசியத்துவம், கலாசாரம் என்பவற்றை பாதுகாத்துக் கொள்ளக் கூடியதாக இருத்தல்.

### தொழில் வாய்ப்புக்கள்



உரு 3.16

### செயற்பாடு

1. மாலைதீவுகளில் சுற்றுலாக் கைத்தொழில் வளர்ச்சியில் செல்வாக்கு செலுத்திய காரணிகள் யாவை?
2. சுற்றுலாக் கைத்தொழில் விருத்தியின்போது தேசியத்துவம், கலாசாரம் என்பவற்றைப் பாதுகாப்பதற்கு மாலைதீவு அரசினால் மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் இரண்டினை எழுதுக.
3. இலங்கையின் சுற்றுலாக் கைத்தொழிலை மாலைதீவின் சுற்றுலாக் கைத்தொழிலுடன் ஒப்பிடுக.
4. மாலைதீவின் சுற்றுலாப் பயணக் கைத்தொழிலுடன் தொடர்புடைய மனங்கவரும் இடங்கள், நிகழ்வுகள் என்பவை பற்றிய படங்கள், தகவல்கள் அடங்கிய கையேடு ஒன்றைத் தயாரிக்குக.